[29th February 1964

தான். ஆகவே, அதைத் தடுக்க அரசாங்கம் உத்தரவு போடுவார்களா? அந்த அந்த ஜில்லா கலெக்டர்களுக்கு உத்தரவு போட்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை குளங்கள் இருக்கின்றன என்று விவரம் எடுக்க உத்தரவு போடுவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படிச் செய்யப்படுகிறதா என்று பரிசிலனை செய்யப்படும்.

திரு. செ. மாதவன் : என்னுடைய கேள்வி, சட்டம் வந்தபிறகு, ஒவ்வொரு கிராமங்களிலும் நோடிபிகேஷன் போடவேண்டும், அதன் பிறகு கிராமத்திலுள்ள கண்மாய்களை எடுத்துக் கொள்ள வேண்டும், அதற்குக் காலதாமதம் ஆகும் ஆகவே, இரும் பிராந்தியங்களில் உடனடியாகக் கண்மாய்களைப் பழுதுபார்க்க உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: முதலில் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்தபிறகு, அதைப் பற்றி யோசிக்க வேண்டும். அதற்குள்ளாக எப்படி எடுக்க முடியும்?

வெள்ளிப்பட்டி ஆற்றின் குறுக்கே அணை

*117 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கந்தர்வ கோட்டை தொகுதியில் உள்ள வெள்ளிப்பட்டி ஆற்றின் குறுக்கே சிறிய அணை ஒன்று கட்டப் பரிசிலனைகள் நடைபெற்றனவா?

(இ) ஆமெனில், அது எந்நிலையில் உள்ளது?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) வெள்ளிப்பட்டி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கான திட்டங்களும் மதிப்பீடுகளும் தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) பரிசிலனையில் இருக்கின்றன.

(*a*) Yes.

(*b*) Plans and Estimates for the construction of an anicut across Vellipatti river are under examination of the Chief Engineer (Irrigation).

திரு. பி. முருகையன் : ஸார், இந்த வெள்ளிப்பட்டி அணைக் கட்டுக்கு அருகாமையில், கோபால்பட்டி ஆற்றில் ஒரு அணை கட்ட வேண்டியது அவசியமாக இருப்பதால், அதைச் செய்வதாக உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.